

திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி, சாணார்பாளையம் சாலையில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளூர் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபாய் 5.50 இலட்சம் மதிப்பீட்டில் சாணார்பாளையம் சாலை பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகில் உயர்கோபுர விளக்குகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் மக்கள் தெண்டபாணி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மாநிலம் முன்னேற, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்றுணர்ந்து, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டி நகர பகுதியைச் சேர்ந்த இளம் வாக்காளர்கள் மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

## பள்ளி வாகனம் விபத்து:

# காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் மாணவ - மாணவிகளுக்கு ஆறுதல்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்!

*திருவண்ணாமலை,செப்.5-*

*பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு விபத்து ஏற்பட்டு காயம் அடைந்த பள்ளி மாணவ மாணவிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.*

*பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 02.09. 2025 அன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டதில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் தானியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ - மாணவிகளை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்து சத்தான உணவுப் பொருட்கள் மற்றும் பழங்களை வழங்கினார்.*

*இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணா துரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.*

*இந்நிகழ்வில் மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.*

## கழக முப்பெரும் விழா! கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம்

# குளித்தலை சட்டமன்றத் தொகுதி - செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*கரூர். செப்.5.*

*கரூரில் செப்டம்பர் 17ம் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் திரளாக பங்கேற்குமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில்*



*கூறியிருப்ப தாவது*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செப்டம்பர் 17ம் தேதி அன்று கரூரில் கழக முப்பெரும் விழா நடைபெறுகிறது. முப்பெரும் விழாவை முன்னிட்டு கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதிகளில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*செப்டம்பர் 5 ம்தேதி (இன்று) மாலை 6 மணிக்கு அரவக்குறிச்சி தொகுதியில் சின்னதாரா புரம் சிவ செல்விமஹால், செப்டம்பர் 6ம் தேதி கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மாலை 6மணிக்கு உப்பிடமங்கலம் சக்தி மஹால். 7ம் தேதி மாலை 5 மணிக்கு குளித்தலை சட்டமன்ற தொகுதியில் அய்யர்மலை சுபம் மஹால், 9 ம்தேதி மாலை 6 மணிக்கு கரூர் சட்டமன்ற தொகுதியில் கரூர் பிரேம் மஹால் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.*

*மேற்கண்ட செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட செயலாளர் வி. செந்தில் பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.*


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**அரங்கத்துறை**
**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

அ. து. ந. க. எண். அ3 / 1270 / 2025

**கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

மண்டலம்- 7, 8 மற்றும் 13ல் புதிய விளையாட்டுத் திடல் & புதிய உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி

பணியின் உத்தேச மதிப்பு **ரூ.97.84** இலட்சம் முதல் **ரூ.498.86** இலட்சம் வரை, முன்வைப்பு தொகை: பணியின் மதிப்பில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **18.09.2025** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **19.09.2025** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4886 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)**




மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காழி.கலைவாணன் ஏற்பாட்டில் சீர்காழியில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம், முருகன் கலந்து கொண்டு பேசினார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தஞ்சை மண்டல பொறியாளர் அணி பொறுப்பாளர் ரவிச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு குமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், சீர்காழி நகரக் கழக செயலாளர் ம.சுப்பராயன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் கே.முத்துராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காழி.கலைவாணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது, மாவட்ட விவசாய அமைப்பாளர் முருகன் மற்றும் பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியைத் தராமல் வாய்மூடி மௌனியாக இருக்கும் நிர்மலாவுக்கு தமிழின் மீது பாசம் தமிழ்நாட்டில் தேர்தல் வந்தால்தான் வருமா?

**பு**ண்ணியத்திற்கு கொடுத்த மாட்டை பல்லைப் பிடுங்கி பார்த்த கதையாக, இருக்க இடம் கொடுத்தால் படுக்க பாய் கேட்ட கதையாய், காங்கிரஸின் சொத்தில், நிலத்தில் நின்று கொண்டு, காங்கிரஸ் கூட்டணியை குதர்க்கம் பேசும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு

திரிபுராவில் லெனின் சிலையே தகர்க்கப்பட்டது. சென்னை கடற்கரையிலிருந்த சிம்மக்குரலோன் சிவாஜி சிலையே மாற்றி வைக்கப்பட்டது. ஆனாலும் மூப்பனார் வாசன், த.மா.கா. என பிரிந்தபோதும், மூப்பனார் சமாதியை கௌரவமாக காத்து வரும் காங்கிரஸ் கூட்டணியை பற்றி 10 அடி தள்ளி ரோட்டில் நின்று கூட பேசாமல் காங்கிரஸ் அறக் கட்டளை இடத்திலேயே நின்று கொண்டு, ஒண்ட வந்த பிடாரி, ஊர் பிடாரியை கேலி செய்வதுபோல, காங்கிரஸ் தி.மு.க. கூட்டணியை விமர்சித்து, நிர்மலா பேசுவது பண்பாடான செயலா?

ஒரு தமிழச்சி இந்தியாவுக்கே நிதி அமைச்சராக இருப்பது, ப.சிதம்பரம் உள்ளிட்ட ஒவ்வொரு தமிழருக்கும் பெருமையே, ஆனால் மொழி திணிப்புக்காக நிதி ஒதுக்கீட்டுக்கு சம்பந்தமே இல்லை எனக் கூறி ரூ.பத்தாயிரம் கோடியை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய முடியாத நிதி அமைச்சர் பதவி எதற்கு? வாய் இருந்தும் ஊமையாய், காது இருந்தும் செவிடனாய், காலிருந்தும் முடவனாய் இருப்பது போல, நிதி அமைச்சராக தமிழச்சி இருந்தும் தமிழகத்துக்கு தரவேண்டிய நிதி பலவகைகளில் ஒன்றிய அரசால் முடக்கப்பட்டுள்ளது. அந்தத் தடையை நீக்க நிர்மலா அம்மாவால் முடியவில்லை.

வரும் 2024 தேர்தலில் பா.ஜ.க. 25 இடங்களில் வெல்லும், அதில் 5 நபர் காபினெட் அமைச்சராக இருப்பார்கள் என்று அன்றைய பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூவினார். ஆனால் தேர்தலிலேயே இதுவரை நிற்காமல் ஒருமுறைக்கு இருமுறை கொல்லைப்புற வழியாக நிதி அமைச்சரான தாங்கள் சென்னை வந்தோமா, போனோமா என்றில்லாமல் பாராளுமன்றம் முதல் பஞ்சாயத்து திடல் வரை ஏன் சுடுகாட்டிலிருந்து கொண்டும் அரசியல் விதண்டாவாதம் செய்கிறீர்கள்.

பக்கத்தூரிலிருக்கும் பாண்டிச்சேரியில் உங்கள் கூட்டணி சட்டமன்ற உறுப்பினர், உங்கள் கட்சி அமைச்சர்கள் மீது (சந்திரபிரியங்கா) பாலியல் குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். அதற்குப் பதில் சொல்லுங்கள், 65 லட்சம் வாக்கு நீக்கப்பட்டதற்கு வெட்கத்தை கொடுங்கள்.

இப்போது அப்பாவை மகளும், மகனும் எதிர்க்கின்ற காலம் போலும். ஒருபக்கம் இலக்கியச் செம்மல் குமரி அனந்தன் கொள்கையை அவர் குமரியே எதிர்க்கிறார்.

ராமதாஸை அவர் மகன் அன்புமணியே எதிர்க்கும் காலம், தமிழிசையை அவர் மகனே ஒழிக கோஷம் போடும் காலம்.

அப்பா சந்திரசேகரை, மனைவியை ஒதுக்குவதும், எதிர்த்துப் பேசுவதும், நடிகர் விஜய் காலம்.

கணவர் சீதாராமன் கொள்கைக்கு எதிராகப் பேசுவது நிர்மலா அம்மா வாழும் காலம்.



**கவிஞர்**
**காசி முத்து மாணிக்கம்**
**செயலாளர்**
**தி.மு.க. வர்த்தகர் அணி**

அந்த வகையில் **மூப்பனாரின் பரம எதிரியான பா.ஜ.க.வை, காமராஜரை உயிருடன் எரிக்க முயன்ற கூட்டத்துடன் வாசன் சேர்ந்து கொண்டு, மௌனம் சாதிக்கவேண்டிய இடத்தில் சர்ச்சையை உண்டாக்க வழிவகுக்கிறார்.**

“நிதியமைச்சர், “மூப்பனார் பிரதமராவதை தடுத்த சக்திகள்” என அரைத்த மாவையே அரைக்கிறார். இதை மூப்பனாரையே செயல்படவிடாமல் தடுத்த சக்திகள் பேசுவது விந்தைதான். ஒரு பொய்யை திரும்பத் திரும்ப சொன்னால் உண்மையாகுமா?

மாந்தோப்புக்கே ஆசைப்படாத காந்தியவாதி மூப்பனாரை மாங்கொட்டைக்கு ஆசைப்பட்டார் என்பது, மூப்பனாரை அவமானப்படுத்துவது ஆகும்.

அவர் நினைத்திருந்தால் 20 எம்.பி.க்கள் இருந்தபோது என்ன, 400 எம்.பி.க்கள் இருந்தபோதே பிரதமரோ, காபினெட் அமைச்சரோ ஆகியிருப்பார்.

பதவியையே விரும்பாதவர் மூப்பனார். பிரம்மச்சாரியை போய் மூன்று பெண்டாட்டிக்கு ஆசைப்பட்டார் என்பதும், அவரை தடுத்திட தி.மு.க.வில் 250 எம்.பி. இருந்தது போலவும் பேசினால், கேப்பையில் நெய் வடிகிறது என்றால் கேட்பவன் கேனையனா?

**ஒரே உறுப்பினராக இருந்த தமிழன் வாழப்பாடியை வலிமையான கேபினெட் அமைச்சராக்கிய பெருமை தி.மு.க.விற்கு உண்டு.**

**39 சட்டமன்ற உறுப்பினர் கொண்ட த.மா.கா.விற்கு, 173 உறுப்பினர் கொண்ட தி.மு.க. ஆதரவால் 4 எம்.பி.க்கள் த.மா.கா. பெற்ற வரலாறு உண்டு.**

**ஒரே ஒரு இராஜ்ய சபா உறுப்பினரான அன்புமணியை ஒன்றிய காபினெட் அமைச்சராக்கிய பெருமை தி.மு.க.விற்கு உண்டு.**

**பா.ஜ.க.வினர், ஒரே உறுப்பினரான வாசனை ஒன்றிய காபினெட் அமைச்சராக்குங்களேன் பார்க்கலாம்.**

**நடந்த வரலாற்றை மாற்றிச் சொல்லும் நிர்மலாவுக்கு தமிழன் மீது பாசம் தமிழ்நாட்டில் தேர்தல் வந்தால்தான் வருமா?**

“ஒழசாவின் பூரி ஜெகநாதர் கோவில் கருவறை சாவி திருடப்பட்டு தமிழ்நாட்டில்தான் உள்ளது. நீங்கள் எதிரணிக்கு வாக்களித்தால் அந்த வாக்கால் நவீன் பட்நாயக் ஆளப்போவதில்லை, ஒரு தமிழன்தான் ஆள்வான்” என அமித்ஷாவும், மோடியும் சொன்னபோது, நிர்மலா என்ன செய்து கொண்டிருந்தார்?

ஒட்டுமொத்த தமிழனை சொல்லாதீர்கள், “பாண்டியன்” என்று பெயரைச் சொல்லுங்கள் என்று சொன்னாரா?

இந்தி மொழித் திணிப்பு ஏற்காமல் சுயமரியாதையாக தளபதி செயல்பட்டதை இந்தியாவே பாராட்டிய சூழலில் ஒட்டுமொத்த தமிழர்களையும் “தமிழர்கள் நாகரீகமற்றவர்கள்” என்று பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியபோது, தி.மு.க. கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்து, பிரதானை மன்னிப்பு கேட்கவைத்தது. அப்போது சபையில் இருந்த தமிழச்சி நிர்மலா அம்மா எதிர்ப்புத் தெரிவித்தாரா?

தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவுக்கு வந்து வெடிகுண்டு வைக்கிறார்கள் என கர்நாடகா ஒன்றிய அமைச்சர் ஷோபா பேசியது கண்டு, நமது நிர்மலா, ஷோபாவை விட்டு எழுந்து கண்டனம் செய்தாரா? தமிழகத்திலிருந்து முதல்வரும், தி.மு.க.வும் கண்டித்த பிறகு மன்னிப்பு கேட்டார்.

நாலாந்தர பேச்சாளர் கைத்தட்டலுக்காக தரமற்று, நியாயமற்று பேசுவதை இந்தியாவின் நிதி அமைச்சர் பேசக் கூடாது.

மூப்பனாரை மட்டும்தான் கலைஞர் மக்கள் தலைவர் என்றார். மூப்பனாரை பிரதமராக்கிட தான் எடுத்த முயற்சிகளை மூப்பனார் வாழும்போதே பட்டியலிட்டு சென்னை விமான நிலையத்தில் சொன்னவர் கலைஞர். பீகார் முதல்வர் லல்லுபிரசாத் யாதவ், உ.பி. முதல்வர் முலாயம்சிங், கம்யூனிஸ்டு தலைவர் சுர்ஜித் என பலரிடம் வேண்டினார். அவர்கள் தந்த பதில் மூப்பனார் பிரதமர் ஆனால் காங்கிரஸ் தானே வளரும். அவரும் காங்கிரஸ் தானே என மறுதலித்தனர்.

**தமிழக பா.ஜ.க. பலருக்கு முகவரி தந்தது. தமிழக பா.ஜ.க.வுக்கு முகவரி தந்த பெருமை இல. கணேசனுக்கு உண்டு. கர்மயோகி என்று அழைக்கப்பட்ட அவரின் மரணத்திற்கு கூட தலைமையிலிருந்து பிரதமர், அமித்ஷா என அழைத்து வரவேண்டிய தமிழச்சி நிர்மலா அம்மா, தானே வராமல் 15 நாள் கழித்து இன்று வந்து படத்துக்கு மாலை போட்டு விட்டு, தமிழனைப்பற்றி பேசிட தங்களுக்கு வெட்கமாக இல்லையா?**

**ஒருமுறைக்கு இருமுறை இல.கணேசனுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், நாகலாந்து கவர்னருக்கு தமிழகத்திலேயே அரசு மரியாதை தந்தவர் தளபதி. தெரியாத பழைய நிகழ்வை நீங்கள் சொல்வதால் தெரிந்த நிகழ்வை நான் சொல்கிறேன். இரவு பகலாக அமைச்சர் மா. சுப்பிர மணியன் அங்கேயே தங்கி, பந்தலிட்டு சிறப்பான ஏற்பாடு செய்தார் என H. இராஜாவால் - வஷிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றவர்கள் தி.மு.க.வினர்.**

எடப்பாடியான உங்கள் முதல்வர் வேட்பாளர் தமிழ்நாட்டில் இருந்து கொண்டே 15 நாட்கள் கழித்துதான் இல.கணேசன் படத்துக்கு மாலை போடுகிறார். உங்கள் அருகில் எடப்பாடி நின்றபோதுதான் கேட்கவில்லை, இப்போதாவது போனில் கேட்டுச் சொல்லுங்கள் ஏன் தாமதம் என்று.

**பழனிசாமியை நேற்றுவரை அண்ணாமலை கேவலமானவர் என்று சொல்லிவிட்டு, இன்று எங்கள் கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் என்று சொல்வது ஏன் தெரியுமா? இப்படித்தான் சிவசேனா தலைமையை ஏற்பதுபோல ஏற்றுவிட்டு, ஏக்நாத் ஷிண்டேவை முதலில் முதல்வராக்கிவிட்டு மறுமுறை பா.ஜ.க. முதல்வர் ஆனது போல, பா.ஜ.க. தமிழகத்திலும் திட்டமிடுகிறது.**

பழனிசாமியை முதல்வர் வேட்பாளர் என்று சொன்னால் கூட்டணி மந்திரி சபைக்கு ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறது.

தனது பெற்ற தாய்க்கு சமமாக மதிக்கப்படவேண்டிய சசிகலாவையே நடுரோட்டில் நிற்க வைத்த எடப்பாடிக்கு பா.ஜ.க.வை ஏமாற்ற எவ்வளவு நேரம் ஆகும்.

அப்படி எடப்பாடி பா.ஜ.க.வை ஏமாற்றாவிட்டால் அவர் ஏமாந்து, ஒரு காலத்தில் டைனோசர் என்ற மிருகம் இருந்தது. இப்போது இல்லை. குப்தர் காலம் என்று இருந்தது. இப்போது இல்லை. சுதந்திரா கட்சி என ஒரு கட்சி இருந்தது. இப்போது இல்லை என்பது போல ஒரு காலத்தில் அ.தி.மு.க. என்று இருந்தது. இப்போது இல்லை. அதற்கு முதல்வர்கள் எல்லாம் இருந்தார்கள், எம்.ஜி.ஆர், ஜானகி அம்மா, ஜெயலலிதா, ஓ.பி.எஸ் என பலர் இருந்தனர். அந்தக் கட்சியின் கடைசி முதல்வர் எடப்பாடி. முடிந்த ஆண்டு மார்ச் 2021 என வரலாறு பேசும்.

தளபதி உடல்நிலை சரி இல்லை என்றாலும் மருத்துவமனையிலிருந்து வந்தவுடன் பீகாருக்குச் செல்கிறார். இப்போது ஜெர்மன், லண்டன் என தமிழர்களை சந்தித்து அவர்கள் சம்பாதித்ததை தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள் என வேண்டி விழைகிறார். அதனால்தான் இந்தியாவின் முதல் தொழில் நகரமாக தமிழ்நாட்டினை உயர்த்திக் காட்டி வருகிறார் தளபதி.

காருள்ளவரை, கடல் நீருள்ளவரை தளபதி புகழ் நிலைக்கும்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி தெற்கு ஒன்றியம் பாகலஅள்ளி,பாளையம்புதூரில் நடைபெற்ற கிளைக்கழக ஆலோசனைக் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி.தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.உடன் தருமபுரி தேர்தல் பார்வையாளர் செங்குட்டுவன்,முன்னாள் மாவட்டச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,ஒன்றிய செயலாளர்கள் கே.பி மல்லமுத்து,ஏ.எஸ்.சண்முகம், பச்சையப்பன்,பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி துரைசாமி, ஒன்றிய நிர்வாகிகள் பி.ஆர். மணி,மோகன், ஐ.டி.விங் ஆர்.ஈஸ்வர், செல்வம், தங்கம், பிரபு, மசியன், ராஜசேகர் மற்றும் கிளைக்கழகத்தினர் பங்கேற்றனர்.